RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-356 | 30 டிசம்பர் | திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## மகரவிளக்கு பூஜைக்காக சபரிமலையில் இன்று மாலை மீண்டும் நடை திறப்பு: தயார் நிலையில் சந்நிதானப் பகுதிகள்



தேனி , டிச.30

சபரிமலை ஐயப்பன் கோயிலில் மகரவிளக்கு பூஜைக்காக நாளை மீண்டும் நடைதிறக்கப்பட உள்ளது. இதற்காக தயார்நிலையில் சந்நிதானப் பகுதிகள் வைக்கப்பட்டுள்ளது. வனப்பாதையில் பக்தர்களை அனுமதிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் கடந்த 26ம் தேதி மண்டல பூஜை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அன்று இரவு நடை சாத்தப்பட்டது. இந்நிலையில் ஜன.14ம் தேதி மகரவிளக்கு பூஜை நடைபெற உள்ளது. இதற்காக இன்று (டிச.30) மாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட உள்ளது. தந்திரி கண்டரரு ராஜீவரு முன்னிலையில் மேல்சாந்தி அருண்குமார்நம்பூதிரி நடையைத் திறந்து வைத்து ஆழிக்குண்டத்தில் ஜோதி ஏற்ற உள்ளார். பின்பு விபூதி, பிரசாதம் வழங்கப்படும். அன்று பூஜைகள் எதுவும் இன்றி இரவு 11 மணிக்கு நடை சாத்தப்படும். தொடர்ந்துநாளை அதிகாலை 3மணி முதல் சிறப்பு வழிபாடுகள் தொடர்ந்து நடைபெறும்.நாளை நடை திறக்கப்பட உள்ளதை முன்னிட்டு சந்நிதானத்தை தயார் செய்யும் பணி கடந்த 3 நாட்களாக நடைபெற்று வருகிறது. இதற்காக தண்ணீர் பீய்ச்சியடிக்கப்பட்டு அனைத்து இடங்களும் தூய்மைப்படுத்தப்பட்டது.

தடுப்புமருந்து புகை மூலம் டெங்கு, மலேரியா போன்ற தொற்றுநோய்கள் பரவுவதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் சுத்திகரிப்பு பணியில் ஈடுபட்ட ஊழியர்களுக்கும் எதிர்ப்பு மருந்துகள் வழங்கப்பட்டன. மகரபூஜைக்கு தேவைப்படும் மருந்துகள் தற்போது இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அதிகாரி டாக்டர் வி.எஸ்.விஷ்ணு தெரிவித்தார்.

நடை திறக்கப்பட உள்ளதை முன்னிட்டு சத்திரம், அழுதகடவு, முக்குழி வனப்பாதையில் பக்தர்கள் காலை 7 மணி முதல் அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மகரபூஜைக்காக 3 நாள் இடைவெளிக்குப்பிறகு மீண்டும் நடை திறக்கப்பட உள்ளதால் ஏராளமான பக்தர்கள் இன்று மதியம் முதலே பம்பை, வனப்பாதைக்கு வந்துள்ளனர்.

## 'திருக்குறள் துணையோடு எதேச்சதிகாரத்தை வெல்வோம்' தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்



சென்னை, , டிச.30

"திருக்குறளில் உள்ள அதிகாரங்களைத் துணையாகக் கொண்டு எதேச்சதிகாரத்தை வெல்வோம். வள்ளுவம் போற்றி வாழ்க்கை சிறந்திட அனைவருக்கும் 2025 புத்தாண்டு நல்வாழ்த்துகள்" எனக் குறிப்பிட்டு திமுக தொண்டர்களுக்கு அக்கட்சித் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

கன்னியாகுமரியில் டிசம்பர் 30, 31, மற்றும் ஜனவரி 1 ஆகிய நாட்களில் திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழா நடைபெறவிருப்பதை ஒட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தின் விவரம் வருமாறு: உலகப் பொதுமறையாம் திருக்குறளை வழங்கிய திருவள்ளுவர் தமிழர்களின் உலக அடையாளமாகத் திகழ்கிறார். உலக வாழ்வியலுக்கான பொது முறையை வழங்கும் அறநெறிகளைக் கொண்ட திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் உலகளாவிய புகழ் சேர்த்திடும் வகையில், முக்கடல் சங்கமிக்கும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலையை நிறுவியவர் கலைஞர்.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்து புகழ் சேர்த்ததோடு, தமிழ்நாடு அரசின் சார்பில் திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கை நடைமுறைப்படுத்தினார். குறள் நெறியை அனைத்து மக்களுக்கும் பரப்புகின்ற வகையில் பேருந்துகளிலும் திருக்குறளை எழுதியவர் அவர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியாவின் தென் எல்லையாக உள்ள தமிழ்நாட்டின் குமரி முனையில் உள்ள பாறையில் திருக்குறளில் உள்ள அதிகாரங்களைக் குறிக்கின்ற வகையில் 133 அடி உயரத்திற்கான சிலையை நிறுவி, அதனைப் புத்தாயிரம் ஆண்டான 112000 அன்று வண்ணவிளக்கொளியில் வான்புகழ் வள்ளுவர் மின்னிடும் வகையில் திறந்து வைத்தார்.

குமரி முனை சிலையின் தலை வரை ஆழிப்பேரலை தாக்கிய போதும், அதனை எதிர்கொண்டு எவ்வித சேதாரமுமின்றி கம்பீரமாக நின்றார் திருவள்ளுவர். காலத்தால் அழியாத காவியமாக நிலைப்பெற்றுவிட்ட அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு, இது வெள்ளி விழா ஆண்டு. திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கிறது.

கால் நூற்றாண்டு காலத்தை கடந்து, இன்னும் பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கவிருக்கும் சிலைக்கு, பேரறிவுச் சிலை எனப் பெயர் சூட்டி விழா எடுத்து மகிழ்கிறது திராவிட மாடல் அரசு.

வள்ளுவர் நமக்கு வெறும் அடையாளம் அல்ல. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்கிற சமூக நீதித் தத்துவத்தை வழங்கிய பேராசான். சமுதாயம் ஆட்சி முறை தனிமனித வாழ்க்கை இவை எப்படி அமையவேண்டும் என்பதற்கான அறநெறிகளை வழங்கிய வழிகாட்டி. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர் தந்த ஈரடிக் குறள்கள் இன்றளவும் மானுட சமுதாயத்தின் மேன்மைக்குத் துணை நிற்கின்றன.

பொதுவாழ்வுக்கும் தனி வாழ்க்கைக்கும் துணை நிற்கும் திருக்குறளை வழங்கிய திருவள்ளுவரை இளந்தலைமுறைத் தமிழர்களும் போற்றிடும் வகையில் பேரறிவுச் சிலையின் வெள்ளிவிழா கன்னியாகுமரியில் டிசம்பர் 30, 31, மற்றும் ஜனவரி 1 ஆகிய நாட்களில் சிறப்போடு நடைபெறவிருக்கிறது.

வெள்ளிவிழாவின் அடையாளமாக வள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறைக்கும் அருகேயுள்ள விவேகானந்தர் மண்டபம் அமைந்துள்ள பாறைக்கும் இடையே கண்ணாடிப் பாலம் அமைக்கப்பட்டு திறக்கப்படுகிறது. கடல் நடுவே கண்ணாடிப் பாலம் என்பது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறை. அதனைத் திறம்பட நிறைவேற்றியிருக்கிறார் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு.

பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் வள்ளுவம் திகழ்கிறது என்பதன் அடையாளமாக நவீனத் தொழில்நுட்பத்தில் கடல் நடுவே அமைந்துள்ள இந்த கண்ணாடிப் பாலத்தை உங்களில் ஒருவனான நான் திறந்து வைக்கவிருக்கிறேன். இனி சுற்றுலாப் பயணிகள் எளிதாக இரண்டு இடங்களுக்கும் சென்று வர முடியும்.

வள்ளுவத்தைப் போற்றும் கருத்தரங்கம், பட்டிமன்றம், பல்வேறு இலக்கிய சுவை மிக்க நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன. பேரறிவுச் சிலையான திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் பள்ளி கல்லூரி மாணாக்கர்களுக்கும் இளையோருக்கும் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுகளும், விருதுகளும் வழங்கப்படவிருக்கின்றன.

உயர்ந்து நிற்கும் திருவள்ளுவர் சிலை போல தமிழ்நாடும் தமிழர்களும் நாளும் உயர்ந்திட வேண்டும், அதற்கேற்ப வள்ளுவர் வழங்கிய திருக்குறளின் நெறி போற்றி நாம் வாழவேண்டும். தமிழின் சிறப்பை உலகம் உணர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் வெள்ளிவிழா கொண்டாடப்படுகிறது. விழா நாட்களில் மட்டுமல்ல எல்லா நாட்களும் திருக்குறளைப் போற்றுவோம். அதன் வழி நடப்போம்.

திருவள்ளுவர் சிலை, ஆழிப்பேரலையை எதிர்கொண்டு உயர்ந்து நிற்பதுபோல தமிழ்நாடும் தடைகளைத் தகர்த்து முன்னேறும். திருவள்ளவர் வழங்கிய திருக்குறளில் உள்ள அதிகாரங்களைத் துணையாகக் கொண்டு எதேச்சதிகாரத்தை வெல்வோம். வள்ளுவம் போற்றி வாழ்க்கை சிறந்திட அனைவருக்கும் 2025 புத்தாண்டு நல்வாழ்த்துகள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்யக்கோரி மேலூர் அருகே பெண்கள் நூதனப் போராட்டம்



மதுரை , டிச.30

டங்ஸ்டன் திட்டத்தை மத்திய அரசு நிரந்தரமாக ரத்து செய்யக் கோரி மேலூர் அருகே பெண்கள் குலவையிட்டும், கிராமிய பாடல்களை பாடியும் போராட்டம் செய்தனர்.

மேலூர் பகுதியில் டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் போராட்டங்களை நடத்துகின்றனர். இதன் தொடர்ச்சியாக கொட்டாம்பட்டி அருகே கேசம்பட்டி மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் ஒன்று கூடினர். சுமார் 300 க்கும் மேற்பட்ட பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் டங்ஸ்டன் திட்டத்தை முழுவதுமாக மத்திய அரசு ரத்து செய்யக்கோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மதுரை, சிவகங்கை, திண்டுக்கல் மாவட்ட எல்லையிலுள்ள கம்பூர், சேக்கிபட்டி, கருங்காலக்குடி , வஞ்சுநகரம், ஒட்டக்கோவில்பட்டி , சிங்கம்புணரி பகுதிகளை உள்ளடக்கிய சுமார் 38,500 ஏக்கரில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்தும் மத்திய அரசுக்கு எதிராகவும் அவர்கள் கோஷங்களை எழுப்பினர். முன்னதாக பெண்கள் நாட்டுப்புற பாடல்கள் பாடியும், கும்மியடித்தும், குலவையிட்டும் தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதற்கிடையில் மதுரை மாங்குளம் அருகிலுள்ள 74 மீனாட்சிபுரத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும், பொதுமக்கள் சார்பிலும் டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிரான அடுத்தகட்ட போராட்டம் குறித்த ஆயத்தக் கூட்டம் இன்று நடந்தது. விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் இளங்கோவன் தலைமை வகித்தார். தமிழ் தேசிய பேரியக்க பொதுச் செயலாளர் கி. வெங்கட்ராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்திற்கு பிறகு ஆர்ப்பாட்டமும் நடந்தது.

தீர்மானம்; டங்ஸ்டன் திட்டத்தை மத்திய அரசு நிரந்தரமாக ரத்து செய்யவேண்டும், முல்லை பெரியாறு பாசன பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும், டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிரான பிற அமைப்புகளுடன் இணைந்து போராடுவது உள்ளிட்ட தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றினர்.

## 'உட்கட்சி பிரச்சினையை நாங்களே பேசித் தீர்ப்போம்' ராமதாஸ் சந்திப்புக்குப் பின் அன்புமணி பேட்டி



சென்னை , டிச.30

"உட்கட்சி பிரச்சினையை நாங்களே பேசித் தீர்ப்போம். பாமக ஒரு ஜனநாயக கட்சி. அத்தகைய கட்சியின் பொதுக்குழுவில் காரசார விவாதங்கள் நடைபெறுவது சகஜம்" என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரித்தார்.

புதுச்சேரி அருகேயுள்ள பட்டானூரில் நேற்று (டிச.28) பாமக புத்தாண்டு சிறப்புப் பொதுக்குழு கூட்டம் நடந்தது. அதில், இளைஞரணி தலைவராக ராமதாஸின் பேரன் நியமிக்கப்பட்டதற்கு அன்புமணி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதனால் அவர்களிடையே மேடையிலேயே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. 'கட்சியில் இருக்க இஷ்டம் இல்லாதவர்கள் கிளம்பலாம்; இது நான் தொடங்கிய கட்சி' என ராமதாஸ் ஆவேசமாக தெரிவித்தார். தொடர்ந்து, தனிக் கட்சி அலுவலகம் தொடங்குவதாக அன்புமணி அறிவித்தார். இது தமிழக அரசியல் களத்தில் பெரும் விவாதப் பொருளானது.

இந்நிலையில், விழுப்புரத்தில் தைலாபுரம் தோட்ட இல்லத்தில் பாமக நிறுவனர் ராமதாஸை அவரது மகனும் பாமக தலைவருமான அன்புமணி ராமதாஸ் இன்று (டிச.29) நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பு ஒரு மணிநேரம் நடந்தது. சந்திப்பின் போது ஜிகே மணி உள்ளிட்ட பாமகவின் முக்கிய நிர்வாகிகள் இருந்தனர்.


ராமதாஸுடனான சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அன்புமணி ராமதாஸ், "2026 சட்டப்பேரவைத் தேர்தல் குறித்து விவாதித்தோம். சித்திரை முழுநிலவு மாநாட்டைப் பற்றி, சாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான போராட்டங்கள், 10.5 சதவீத உள் இடஒதுக்கீடு, விவசாய மாநாட்டுக்குப் பின்னர் அடுத்தடுத்து பாமக முன்னெடுக்க வேண்டிய போராட்டங்கள் என்னென்ன என்பன குறித்து ஆலோசனை செய்தோம்.

வருகின்ற ஆண்டு எங்களுக்கு மிக முக்கியமான ஆண்டு. தமிழகத்தில் நடைபெறும் மக்கள் விரோத ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றினோம். அதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து ஐயாவுடன் ஆலோசித்தோம்.

பாமக ஒரு ஜனநாயகக் கட்சி. அத்தகைய கட்சியின் பொதுக்குழுவின் காரசார விவாதங்கள் நடைபெறுவது சகஜமே. கட்சியின் உட்கட்சி விவகாரங்களை பொதுவெளியில் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தப் பிரச்சினையைப் பற்றி நாங்கள் பேசிக் கொள்வோம். ஐயா எங்களுக்கு என்றும் ஐயா தான்" என்றார்.

முகுந்தன் பரசுராமன் நியமனம் பற்றி நிருபர்கள் கேள்வி எழுப்பியபோது அதற்கு நேரடியாக பதிலளிக்காமல் அன்புமணி கடந்து சென்றது மீண்டும் விவாதப் பொருளாகியுள்ளது..

## அதிகரிக்கும் நீர்வரத்து: பூண்டி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு அதிகரிப்பு



திருவள்ளூர் , டிச.30

மழையால் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர் வரத்து அதிகரித்து வருவதால் பூண்டி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு விநாடிக்கு 2 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் அருகே உள்ள பூண்டி ஏரி, சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளில் ஒன்றாக விளங்குகிறது. இந்த ஏரிக்கு வடகிழக்கு பருவ மழை காரணமாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து மழை நீர் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

அவ்வாறு வரும் மழைநீர் மிக அதிகளவில் வந்ததால், கடந்த 12ம் தேதி முதல், 18ம் தேதிவரை பூண்டி ஏரியிலிருந்து உபரி நீர் திறக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 26ம் தேதி இரவு திருத்தணி, பள்ளிப்பட்டு உள்ளிட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கன மழை, மிதமான மழை பெய்தது. அதுமட்டுமல்லாமல், ஆந்திர மாநிலம் கிருஷ்ணாபுரம் அணையில் இருந்து 26ம் தேதி இரவு முதல், 27ம் தேதி காலை வரை விநாடிக்கு ஆயிரம் கன அடி உபரி நீர் திறக்கப்பட்டது.

இதனால், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து பூண்டி ஏரிக்கு வரும் நீர்வரத்து அதிகரித்து வந்ததால், அந்த ஏரியின் பாதுகாப்பு கருதி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மீண்டும் உபரி நீரை கடந்த 27ம் தேதி காலை 9 மணி முதல் நீர் வள ஆதாரத் துறையினர் வெளியேற்றி வருகின்றனர். விநாடிக்கு ஆயிரம் கன அடி என அந்த உபரி நீர் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில், நீர் வரத்து அதிகரிப்பு காரணமாக நேற்று (28ம் தேதி) மதியம் பூண்டி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு விநாடிக்கு 2 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

நேற்று (டிச.29) காலை நிலவரப்படி, 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு மற்றும் 35 உயரம் கொண்ட பூண்டி ஏரியின் நீர் இருப்பு, 3,135 மில்லியன் கன அடியாகவும், நீர் மட்ட உயரம், 34.96 அடியாகவும் உள்ளது.

எனவே, பூண்டி ஏரியில் இருந்து உபரி நீர் வெளியேறுவதால், கொசஸ்தலை ஆற்றின் இரு கரையோரங்களில் உள்ள நம்பாக்கம், ஆட்ரம்பாக்கம், ஒதப்பை, மெய்யூர், திருக்கண்டலம், வெள்ளிவாயல்சாவடி, மணலி புதுநகர், சடையான்குப்பம், எண்ணூர் உள்ளிட்ட பகுதிகளில் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு தொடர்ந்து வெள்ள அபாய எச்சரிக்கையை விடுத்து வருகிறது நீர வள ஆதாரத்துறை.

## பெண்கள் பாதுகாப்புக்கான 'போஸ்' அமைப்பு கட்டாயம்: பல்கலைக்கழகங்களுக்கு உயர்கல்வித் துறை உத்தரவு

சென்னை, டிச.30

தமிழகத்தில் அனைத்துவித உயர்கல்வி நிறுவனங்களிலும் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தலுக்கான 'போஸ்' அமைப்பு கட்டாயம் ஏற்படுத்தப்பட வேண்டுமென உயர்கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரம் சர்ச்சையானதை தொடர்ந்து தமிழக உயர்கல்வித் துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி உயர்கல்வி நிறுவனங்களில் பின்பற்ற பாதுகாப்பு அம்சங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் உயர்கல்வித் துறை செயலர் கோபால் தலைமையில் இணையவழியில் அண்மையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தொழில்நுட்ப கல்வித் துறை ஆணையர் டி.ஆபிரகாம், மாநில பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அதேபோல், கல்வி நிறுவனங்களுக்கு வந்துசெல்லும் வெளிநபர்கள் விவரங்கள், வாகனங்கள் எண்ணிக்கையை தினமும் ஆவணம் செய்யவேண்டும். எலக்ட்ரீசியன்கள், கேன்டீன் தொழிலாளர்கள், ஒப்பந்தம் மற்றும் கட்டுமான பணியாளர்கள் உட்பட வெளியாட்களை பயோமெட்ரிக் வருகைப்பதிவு கொண்டு அவர்கள் வருகையை பராமரிக்க வேண்டும். கல்வி நிறுவனங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நுழைவுவாயில்களை தவிர்க்க வேண்டும். மாணவர்கள், பேராசிரியர்கள், பணியாளர்களுக்கு அடையாள அட்டை அவசியமாகும். போதைப்பொருள் தடுப்புக்குழு போன்ற முக்கிய குழுக்கள் வளாகத்தில் திறம்பட செயலாற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட மூன்றாவது மண்டலத்தில் உள்ள 43வது வார்டில் இடுகாடு சீரமைக்கும் பணியை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ அவர்கள் ஆய்வு செய்து அதிகாரியிடம் உடனடியாக முடிக்க வேண்டும் என்று கூறினார் உடன் மண்டல குழு தலைவர் ஜெயாபிரதீப் சந்திரன், பகுதி கழக செயலாளர் இரா.சுரேஷ், பொதுக்குழு உறுப்பினர் தேவேந்திரன், பகுதி அமைப்பாளர்கள் இரா.விஜயகுமார், சிட்லபாக்கம் மனோகரன், மாமன்ற உறுப்பினர்கள் சிட்லபாக்கம் ஜெகன், இரா.ராஜா, முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி துணை நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் வட்ட பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் நல சங்கங்கள் நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.





சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சி கூட்டம் நேற்றுமுன்தினம் மேயர் முத்துத்துரை தலைமையில் நடைபெற்றது.துணை மேயர் குணசேகரன், ஆணையாளர் சித்ரா முன்னிலை வகித்தனர்.தொடர்ந்து, பேசிய அ.தி.மு.க., கவுன்சிலர்கள் காரைக்குடி மாநகராட்சியில் முறையாக பணிகள் நடைபெறவில்லை, தங்களது வார்டுகளில் திட்டப்பணிகள் புறக்கணிக்கப்படுவதாக கூறி (அதிமுக) கவுன்சிலர்கள், குருபாலு, பிரகாஷ், தேவன், ராம்குமார், அமுதா மற்றும் சுயேச்சை மெய்யர் வெளிநடப்பு செய்தனர்.இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# திமுக சார்பில் உதயநிதியின் உதயநாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கல் பொதுக்கூட்டம்





சோழிங்கநல்லூர் டிச29

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 200 வது வட்டம், மாலை 6:00 மணிக்கு, ஜவகர் நகர், எழில்முகா நகர், ஓ.எம்.ஆர்.சங்கீதா ஹோட்டல் வழி, செம்மஞ்சேரி , நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி மகளிர் 500க்கும் மேற்பட்டோருக்கு ஹாட் பாக்ஸ் நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுக்கூட்டம்,200 வது வட்ட செயலாளர் , முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான செம்மஞ்சேரி இரா. நாகராஜ் தலைமையில் நடைபெற்ற விழாவில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சோழிங்க நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் திமுக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் வரவேற்புரையாக 200 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அ. முருகேசன், மு.ஊ.ம. தலைவர் வி. தனசேகரன், சோ.ம.பபொருளாளர், கே.டி. ரவி, மா.ம. அணி அமைப்பாளர், டாக்டர் .என்.அனிஷ், மு.ஓ.து. பெ. தலைவர் என். குருசாமி, மா.நெ.அ. து. அமைப்பாளர் ஜி .கே. செந்தில் குமார், மாவட்ட பிரதிநிதி எஸ்.பி. ஹரி, வ.அ.தலைவர் எம். சங்கர், மு. தலைவர் எஸ். முருகன் , வட்டப் பொருளாளர் ஆர். ராஜேந்திரன், வ. து. செயலாளர் கே. புஷ்பா, தொகுதி ம.து. அமைப்பாளர் எஸ்.கவிதா, ப. பகுதி பிரதி நிதி உ தேவேந்திரன் த. தொ. அ. ஒருங்கிணைப்பாளர் எம். ராமநாதன், பகுதி பிரதிநிதிகள்: எஸ். தேவேந்திரன், கே. பி. சேகர், எம் .அருண்பிரகாஷ், எம். முனுசாமி, ஆடியோ ராஜ், தலைமைக் கழக பேச்சாளர்கள் சிங்கை பிரபாகரன், இரா. ரிஷிசந்தோஷ், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், த. செ. உறுப்பினர் க .சோமு, மாவட்ட துணைச் செயலாளர் மு. மனோகரன், புனித தோமையார் மாலை தெற்கு ஒன்றிய தலகச் செயலாளர், கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன், தலைமை பொதுகுழு உறுப்பினர் ஆ. அரிகிருஷ்ணன், மா. இலா. அ.அமைப்பாளர், சோழிங்கநல்லூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் : ஜி. சங்கர், வே வி குமரேசன், பா. தேவகுமார், எஃப் .அரசு 200 ஆவது வட்ட செயற்குழு உறுப்பினர்கள்: இ. கஜேந்திரன், சோழர் கே. கருணா, ஜி. கோபாலகிருஷ்ணன், வி. செல்வராஜ், டி. ஏழுமலை, எஸ். டில்லிபாபு, கே. சேகர், வி. ராம்குமார் ,சின்னராஜ் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி அணிகளின் நிர்வாகிகள் : எஸ். பாண்டுரங்கன் , எஸ். விக்னேஷ், த.வி. பார்த்திபன், கார்த்திக், கோ. நா. சக்திவேல், எம். முருகன்,ஏ. சி.முருகவேல், சந்தோஷ்ராஜ் ,ஆர்.ராமு, ஆல்பர்ட் , அன்பழகன், சுரேஷ், எம். அருண்குமார், வி. அன்னலட்சுமி ,ஏ

ராணி, விமலாபாய்,ஆ.பத்மா, பச்சையம்மாள், எஸ். சாரதா, ஓ .பி .கவிதா, விஜயா நன்றி உரையாக எஸ் .முருகன் வி .ராஜேஷ் உள்ளிட்ட 200வது வட்ட தி. மு.க.சோழிங்கநல்லூர் சென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# பரமக்குடி வழக்கறிஞர்கள் சங்க நூலகத்தை திறந்து வைத்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி



பரமக்குடி டிச.30

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள வழக்கறிஞர்கள் சங்க நூலகத்தை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சி. சரவணன் வழக்கறிஞர்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.கல்வெட்டை மூத்த வழக்கறிஞர் சதீஷ் பராசரன் திறந்து வைத்தார். மூத்த வழக்கறிஞர் பராசரன் படத்தை சென்னை உயர்நீதிமன்றநீதிபதி எம் நிர்மல் குமார் திறந்து வைத்தார்.நூலகத்தைப் பற்றி மாவட்ட முதன்மை நீதிமன்ற நீதிபதி மெகபூப் அலிகான், ராமநாதபுரம் மாவட்ட பொறுப்பு நீதிபதிகள் சி.சரவணன், எம். நிர்மல் குமார் சதீஷ் பராசரன் ஆகியோர் நூலகத்தை பற்றியும் நூலகத்தின் பயன்பாடு பற்றியும் இளம் வழக்கறிஞர்கள் நூலகத்தை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று பேசினர். மாவட்ட அளவில் நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் கலந்து கொண்டனர்.

முன்னதாக, பரமக்குடி வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஆர் பூமிநாதன் அனைவரையும் வரவேற்றார்.விழாவில், மூத்த வழக்கறிஞர்கள் முகுந்தன் முத்து கண்ணன் இளமுருகன். என்.செந்தில்குமார், சரவண பாண்டியன், சௌமிய நாரயணன். கமால், தினகரன், சி.பசுமலை, வடிவேல்முருகன், இராமகிருஷ்ணன் உள்பட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். நீதிபதிகளுக்கு சால்வை அணிவித்து நினைப் பரிசுகளை வழக்கறிஞர்கள் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். யுவராஜ் நன்றி கூறினார்.



# அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள விஏஓ தேர்வு இலவச பயிற்சி வகுப்பு - சிவகங்கை ஆட்சியர் அறிவிப்பு

சிவகங்கை டிச.30

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள Group IV/ VAO தேர்விற்கென, வருகின்ற 02.01.2025 முதல் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடத்தப்படவுள்ள, இலவச பயிற்சி வகுப்பில் மாணாக்கர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக ஜிழிறிஷிசி, ஜிழிஹிஷிஸிஙி, மற்றும் ஜிஸிஙி போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

இத்தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் நடத்தப்படும் பயிற்சி



வகுப்புகளில் ஆண்டுதோறும் 500ற்கும் மேற்பட்ட மாணவ/ மாணவியர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெறுகின்றனர். மேலும், இப்பயிற்சி வகுப்புகளின் மூலம், அதிக அளவிலான மாணவ/ மாணவியர்கள் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பல்வேறு அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

தற்போது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள ஆண்டுத்திட்ட அட்டவனையில் TNPSC Group IV/VAO தேர்விற்கு அறிவிக்கை வருகின்ற 25.04.2025 அன்று வெளியிடப்படவுள்ளது எனவும், அதற்கான தேர்வு வருகின்ற 13.07.2025 அன்று நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, TNPSC Group IV/ VAO தேர்விற்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் வருகின்ற 02.01.2025 முதல் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சி, வகுப்புகளில் அதிகளவிலான பாடவாரியான பயிற்சித் தேர்வுகளும் மற்றும் மாநில அளவிலான பொது மாதிரித்தேர்வுகளும் நடத்தப்படவுள்ளது.

மேலும், இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் லீttps:// tinyurl.com/tnpscgroup4coach-ingsvg என்ற google form-ல் தங்கள் சுய விவரங்களை பூர்த்தி செய்தோ அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வருகை புரிந்தோ பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத் தன்னார்வ பயிலும் வட்ட நூலகத்தில், இத்தேர்வுக்கான புத்தகங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இத்துறையின் www.tamilnaducareerservices.tn.gov.in என்ற மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் அனைத்துப் போட்டித்தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகள் மற்றும் முந்தைய வருட வினாத்தாள்கள் ஆகியவை பதிவேற்றம் செய்யப் பட்டுள்ளது. இந்த மெய்நிகர் கற்றல் இணையதளத்தையும் வேலைநாடும் இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எனவே, இப்பயிற்சி வகுப்புகளில் அதிக அளவிலான மாணவ/மாணவியர்கள் கலந்து கொண்டு தேர்வுகளில் வெற்றி பெற்று, அரசு வேலைவாய்ப்பினை பெற்று பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரி வித்துள்ளார்.

# 200 வது வட்ட திமுக சார்பில் உதயநிதியின் உதயநாள் விழா 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல் பொதுக்கூட்டம்

சோழிங்கநல்லூர் டிச.29

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 200 வது வட்டம், மாலை 6:00 மணிக்கு, சுனாமி நகர், செம்மஞ்சேரி , நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி மகளிர் 1000க்கும் மேற்பட்டோருக்கு ஹாட் பாக்ஸ், ஊனமுற்றோர், முதியவர்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுக்கூட்டம்,200 வது வட்ட செயலாளர் , இரா. நாகராஜ் தலைமையில் 200 வது மாமன்ற உறுப்பினர் அ. முருகேசன் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது . விழாவில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி , சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் , தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சிதங்கபாண்டியன் திமுக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து 200 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அ. முருகேசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அனைவரும் வாழ்த்தி மாலை அணிவித்து கேட்க வெட்டி, கொண்டாடி வாழ்த்துக்களை தெரிவித்து விழாவை





சிறப்புடன் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

வரவேற்புரையாக மு.ஊ.ம. தலைவர் வி. தனசேகரன், சோ.ம.பபொருளாளர், கே.டி. ரவி, மா. ம. அணி அமைப்பாளர், டாக்டர் .என்.அனிஷ், மு.ஓ.து. பெ. தலைவர் என். குருசாமி, மா.நெ.அ. து. அமைப்பாளர் ஜி .கே. செந்தில் குமார், மாவட்ட பிரதிநிதி எஸ்.பி. ஹரி, வ.அ.தலைவர் எம். சங்கர், மு. தலைவர் எஸ். முருகன் , வட்டப் பொருளாளர் ஆர். ராஜேந்திரன், வ. து. செயலாளர் கே. புஷ்பா, தொகுதி ம.து. அமைப்பாளர் எஸ்.கவிதா, ப. பகுதி பிரதி நிதி உ தேவேந்திரன் த. தொ. அ. ஒருங்கிணைப்பாளர் எம். ராமநாதன், பகுதி பிரதிநிதிகள்: எஸ். தேவேந்திரன், கே. பி. சேகர், எம் .அருண்பிரகாஷ், எம். முனுசாமி, இவ்விழாவில் தலைமைக் கழக பேச்சாளர்கள் காமராஜ், சூரியபிரகாஷ் மற்றும் த.செ. உறுப்பினர் க .சோமு, மாவட்ட துணைச் செயலாளர் மு. மனோகரன், புனித தோமையார் மாலை தெற்கு ஒன்றிய தலகச் செயலாளர், கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன், தலைமை பொதுகுழு உறுப்பினர் ஆ. அரிகிருஷ்ணன், 189வது மாமன்ற உறுப்பினர் வ.பாபு, 199வது மாமன்ற உறுப்பினர் ஜி. சங்கர், 198வது மாமன்ற உறுப்பினர் பா. தேவகுமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜே .இ. பாண்டியன், சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 200வது வட்ட தி. மு.க. சோழிங்கநல்லூர் சென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# பெருங்களத்தூர் பீர்க்கன் கரணை வணிகர் சங்கம் சார்பில் 2025 ஆண்டு காலண்டர் வெளியீடு

பெருங்களத்தூர் டிச30

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பெருங்களத்தூர் பீர்க்கன் கரணை வணிகர் சங்கம் சார்பில் 2025 ஆண்டு காலண்டர் ஒவ்வொரு கடைக்கும் நேரில் சென்று நிர்வாகிகள் வழங்கினர்.



செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பெருங்களத்தூர் பீர்க்கன்கரணை கிளை வெகு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதன்படி பெருங்களத்தூர் பீர்க்கன்காரணை வியாரிகள் சங்கத்தின் 2025ம் ஆண்டிற்காக காலண்டர் அச்சடிக்கப்பட்டுள்ளது.

புதிய காலண்டரை பெருங்களத்தூர் பீர்க்கன் காரணை பகுதியில் உள்ள ஒவ்வொரு வியாபாரிகளுக்கு நேரடியாக சென்று கடந்த ஒரு வாரமாக வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி பெருங்களத்தூர் பேருந்துநிலையம், காமரஜார் நெடுஞ்சாலை, காந்தி ரோடு, சினிவாச நகர் மெயின்ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளுக்கு வணிகர் சங்கத்தின் தலைவர் பாலமுருகன், செயலாளர் சுப்புராமன் ஆகியோர் தலைமையில் கடைகளுக்கு நேரடியாக சென்று காலண்டர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பெருங் களத்தூர் பீர்க்கன்காரணை வியாபாரிகள் சங்கத்தின் பொருளாளர் பார்தீபன், துணை தலைவர் பாலாஜி, சங்க சட்ட ஆலோசகர் வழக்கறிஞர், தினேஷ் ராஜ் ஆகியோர் ஒவ்வொரும் கடைகளுக்கும் நேரடியாக சென்று வணிகர் சங்க கலாண்டரை வணிகர்களுக்கு வழங்கினர்.

சங்க காலண்டரை பெற்று கொண்ட ஒவ்வொருவரும் ஆர்வத்துடன் தங்களது கடைகளில் பழைய காலண்டரை கழற்றி விட்டு புதிய காலண்டரை மாற்றி கொண்டனர்.

# பெரியகுளத்தில் சிதம்பர தீர்த்த தொட்டி அருகில் மாபெரும் அன்னதானம் வழங்கல்

பெரியகுளம், டிச30





தேனி மாவட்டம் பெரியகுளம் சோத்துப்பாறை செல்லும் வழியில் உள்ள தீர்த்த தொட்டி அருகில் மார்கழி மாதம் முதல் சோமவாரம் மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. இந்நிகழ்வில் 75 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகிற விஸ்வ பிராமண 300 வீட்டு வகுப்பு சமாதரனை சங்கத்தின் சார்பாக மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் பக்த கோடிகளும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அன்னதானத்தில் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் மாவட்ட அளவில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பேரறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டி

திண்டுக்கல் டிச30

திண்டுக்கல் பிரிவில் 202425 ஆம் ஆண்டிற்கான பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை சிறப் பாக கொண்டாடும் பொருட்டு மாவட்ட அளவிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பேரறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டி 04.01.2025 அன்று காலை 7.00 மணிக்கு மாவட்ட விளையாட் டரங்கத்தில் நடைபெற உள்ளது.



இப்போட்டியானது, 13 வயது, 15 வயது மற்றும் 17 வயது என 3 பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது. 13 வயதிற்குட்பட்ட மாணவர் களுக்கு 15 கி.மீட்டர் தூரம், மாண விகளுக்கு 10 கி.மீட்டர் தூரம், 15 வயதிற்குட்பட்ட மாணவர் களுக்கு 20 கி.மீட்டர் தூரம், மாண விகளுக்கு 15 கி.மீட்டர் தூரம், 17 வயதிற்குட்பட்ட மாணவர்க ளுக்கு 20 கி.மீட்டர் தூரம், மாண விகளுக்கு 15 கி.மீட்டர் தூரம் போட்டிகள் நடைபெறும்.

அண்ணா மிதிவண்டி போட்டி யில் பங்கு பெற விருப்பம் உள்ள மாணவ, மாணவிகள் இந்தியா வில் தயாரான சாதாரண மிதி வண்டிகளை மட்டுமே பயன் படுத்த வேண்டும். மேலும் பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியை யிடம் வயது சான்றிதழ் கண்டிப் பாக பெற்று வருதல் வேண்டும்.


இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் இடம் பெறுபவர்களுக்கு ரூ.5000, 2ஆம் இடம் ரூ.3000, 3ஆம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.2000 மற்றும் 4 முதல் 10ஆம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.250 வீதம் பரிசு தொகை (காசோலையாக) மற்றும் சான்றிதழ்கள் வழங்கப் படும்.

மேலும் விபரங்களுக்கு, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மாவட்ட விளையாட்டரங்கம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் தாடிக்கொம்பு ரோடு, திண்டுக்கல்-624 004 என்ற முகவரியில் நேரிலோ அல்லது கைப்பேசி எண் 7401703504 வாயிலாகவோ சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ள லாம் என மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, தெரி வித்துள்ளார்.



இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் அருகே கருங்குடி ஊராட்சி கொத்தியார்கோட்டை கிராமத்தில் நேற்று முன்தினம் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த மூதாட்டியின் தங்கச் செ யினை பறித்துச் சென்ற குற்றவாளிகளை 15 மணி நேரத்திற்குள் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்த திருப்பாலைக்குடி காவல் ஆய்வாளர் ஜெய்சங்கர் மற்றும் சக காவல்துறை அதிகாரிகளின் செயலை பாராட்டி ஆர் எஸ் மங்கலம் ஒன்றிய பெருந்தலைவர் இராதிகாபிரபு. நேரில் சென்று வாழ்த்து கூறினார்.





வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, இளையநல்லூர் ஊராட்சியில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின்கீழ் ரூ.23.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தை நீர்வளத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினர். இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நீசெந்தில்குமரன், காட்பாடி மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், மக்கள் பிரதிநிதிகள், வட்டார வளர்ச்சி அலுவலர் நந்தகுமார்,அரசுத் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சின்னக்காம்பட்டி, எல்லைப்பட்டி மற்றும் மார்க்கம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் திட்டப்பணிகளை திறந்து வைத்த உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்

ஒட்டன்சத்திரம் டிச30





திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சின்னக்காம்பட்டி, எல்லைப்பட்டி மற்றும் மார்க்கம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று முன்தினம் திறந்து வைத்து, ரூ.1.30 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டு பணிகளை தொடங்கி வைத்தார்.



இந்நிகழ்ச்சிகளில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரி வித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார்.

ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, சின்னக்காம்பட்டி ஊராட்சியில் கோமாளிப்பட்டி மற்றும் நாரணப்பநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் தலா ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணியர் நிழற்குடை, நமக்குநாமே திட்டத்தில், சின்னக்காம்பட்டி ஊராட்சியில், கோமாளிப்பட்டி, இராகவநாக்கன்பட்டி கிராமங்களிலும், எல்லப்பட்டி ஊராட்சியில் எல்லப்பட்டி ஆகிய கிராமங்களிலும் தலா ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும், நாரணப்பநாயக்கன்பட்டியில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்ட சமுதாயக்கூடங்கள், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், சின்னக்காம்பட்டி ஊராட்சியில் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நூலக கட்டடம் மற்றும் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடம், மார்க்கம்பட்டி ஊராட்சியில் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், எல்லப்பட்டி ஊராட்சியில் எல்லப்பட்டியில் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் அண்ணாநகரில் ரூ.9.32 இலட்சம் மதிப்பீட்டிலும், மார்க்கம்பட்டி ஊராட்சி மார்க்கம்பட்டியில் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்ட நியாய விலைக்கடை கட்டடங்கள் என மொத்தம் ரூ.2.80 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், சின்னக்காம்பட்டி ஊராட்சியில் இராகவநாயக்கன்பட்டி முதல் மலையடிவாரம் வரையிலான சாலை ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 26ஆம் தேதி காலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வாயிலாக மொத்தம் ரூ.6.59 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் மற்றும் மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வாயிலாக ரூ.2.80 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், நேற்று முன்தினம் காலையில் ரூ.7.15 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டு பணிகளும், மாலையில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப்பணிகளும் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன.

ஆகமொத்தம் மட்டும் ரூ.9.39 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.8.45 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன, என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

விழாவில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மு.அய்யம்மாள், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் கா.பொன்ராஜ், கூட்டுறவு சங்கங்கள் இணைப் பதிவாளர் சி.குருமூர்த்தி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் பூங்கொடி, உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) ஐ.நாக ராஜன், உதவிப்பொறியாளர் விஜயராகவன், வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதீஸ்வரன், நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டம் உதவிப்பொறியாளர் பொன்னுவேல், இளநிலைப் பொறியாளர் கருப்பண்ணன், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநி திகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# காளையார் கோவில் ஆண்டிச்சூரணியில் கிராம அறிவியல் திருவிழா கொண்டாட்டம்

காளையார் கோவில் டிச. 30



சிவகங்கை மாவட்டம் காளை யார்கோவில் ஒன்றியத் தில் உள்ள ஆண்டிச்சூரணி கிராமத் தில் ஆர் சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்துறை மூல மாக வானவில் மன்ற கருத்தா ளர்களைக் கொண்டு கிராம அறிவியல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக் கியசாமி தலைமை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியை அருள்சகோதரி மெர்சி முன் னிலை வகித்தார்.

வானவில் மன்ற கருத்தா ளர் பாண்டிச்செல்வி வரவேற் புரையாற்றினார். சிறப்பு விருந் தினராக ஆர் சிநடுநிலைப்பள்ளி யின் தாளாளர் அருள்தந்தை சேவியர் கலந்துகொண்டு அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்ட பல்வேறு வளர்ச்சிகள் குறித்து உரையாற்றினார்.



வானவில் மன்ற கருத்தாளர் ஜெயப்பிரியா மாணவர்களுக்கு பல்வேறு வகையான அறிவியல் சோதனைகள் செய்து காட்டி னார். மந்திரமா?தந்திரமா? தண் ணீரில் விளக்கு ஏற்றுதல் தலை கீழாக பெயர் படித்தல் பலூன் பம்ப் மாயை எழுத்து நடமா டும் மெழுகுவர்த்தி சீசா பெரிஸ்கோப் பெர்னாலி பலூன் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை காற்றால் கார் ஓட்ட லாமா? ராக்கெட் செயல்படும் விதம் ஆகிய எளிய சோதனை களை மாணவர் களுக்கு செய்து காட்டியும் அதற்கான விளக்கம் அன்றாட வாழ்வியல் பயன்பாடு பற்றியும் செய்து காண்பித்தனர்.

கலந்துகொண்ட மாணவர்கள் அனைவருக்கும் விஞ்ஞான துளிர் அறிவியல் மாத இதழ் வழங்கப்பட்டன. மாணவர்களின் பெற்றோர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் போட் டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. காளையார் கோவில் வவளர்ச்சிஉபக்குழு ஒருங்கிணைப்பாளர் செல்வம் வாழ்த்துரை வழங்கினார். வானவில் மன்ற கருத்தாளர் ஜெயப்பிரியா நன்றி கூறினார். பெற்றோர்கள் ராதிகா கார்த்திகா சரண்யா ரேவதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரையில் அரசு அலுவலகங்கள் முன்பு அரசு ஊழியர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்

மானாமதுரை டிச30




சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக முதல்வர் தேர்தல் கால வாக் குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பு தமிழகம் முழுவதும் நடைபெறுவதை தொடர்ந்து மானாமதுரையில் வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மானாமதுரை நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் நடைபெற்றது 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி முழக்கங்கள் இட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மேலும் தமிழக அரசு இந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலமாக அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற்று நிர்வாகிகளை அழைத்து பேச வேண்டும் இல்லையெனில் மாநில அளவில் பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெறும் எனவும் முழக்கமிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மானாமதுரை வட்ட கிளை தலைவர் தலைவர் எஸ். கோபால் முன்னிலையாக எஸ். செல்வராஜ் துணைத் தலைவர், வாழ்த்துரை தோழர் எ. பாண்டி அரசு ஊழியர் சங்க மாவட்ட துணை தலைவர், மற்றும் இரா. மாரி மாவட்ட பொருளாளர் நன்றியுரை சப்பானி முத்து மாவட்ட இணை செயலாளர், சே.செந்தில் பெரியசாமி மானாமதுரை செயற்குழு உறுப்பினர் செந்தில்குமார் மற்றும் தோழர்கள் முருகன் சிலம்பரசன் மற்றும் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் சங்க உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத் செய்தித்தொடர்பாளர் நியமனம்




கந்தர்வகோட்டை டிச30

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அச்சங்கத்தின் மாநில செய்தித் தொடர்பாளராக புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டை ஒன்றிய ஆசிரியர் அ.ரகமதுல்லாவை நியமித்து அறிவிப்பை வெளியிட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப்பட்டியில் பணிபுரிந்து வரும் பட்டதாரி அறிவியல் ஆசிரியர் அ.ரகமதுல்லா என்பவரை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளராக நியமித்து அறிவிப்பை வெளியிட்டார்.

அறிவிப்பை வெளியிட்டு பேசிய தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் தியாகராஜன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு அதிகம் உள்ளது.

வரும் புத்தாண்டு 2025இல் இதற்கான அறிவிப்பு வெளிவரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது என்று பேசினார்.

# சிவகங்கை மாவட்டம்கூட்டுறவுத்துறையின் மூலம் பல்வேறு வகையான கடனுதவிகள் பெற்று பயனடைந்த விவசாயிகள், முதலமைச்சருக்கு நன்றி




முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டு வரும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதில், குறிப்பாக கூட்டுறவுத் துறையின் வாயிலாக பொது மக்கள் மற்றும் விவசாய பெருங்குடி மக்களுக்கு பயனுள்ள வகையிலான எண்ணற்ற திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் முதல் கூட்டுறவு சங்கம் 1904ல் திருவள்ளூவர் மாவட்டத்தில் "திரூர்" என்ற கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வரும் கூட்டுறவுத் துறை, தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது பெருமைக்குரியதாகும்.

சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 211 வகையான கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தவிர, சிவகங்கை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், மீனவர் கூட்டுறவு சங்கங்கள், தொழில் கூட்டுறவு சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் என மொத்தம் 439 கூட்டுறவு சங்கங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இதுதவிர, சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு, விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் நுட்பங்களை வழங்குவதற்கும், வேளாண் சாகுபடி குறித்த தகவல்கள் அளிப்பதற்கும், விளைபொருள்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்திட சந்தை வாய்ப்புகளை அமைத்து தருவதற்கும், விவசாயத்தை இலாபகரமாக மாற்றி அதிக வருவாய் பெரும் நோக்கில் 2 உழவர் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, குறைந்த விலையில் மருந்துகள் விற்பனை செய்திடும் வகையில், 7 கூட்டுறவு மருந்தகங்கள் செயல்பட்டு வருவதுடன், மேலும் 12 இடங்களில் முதல்வரின் மருந்தகம் அமைத்திட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதி மக்களையும் கூட்டுறவுத்துறையின் சேவைகள் சென்றடையும் வகையில், 100 இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் உருவாக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் சூசையப்பர்பட்டினம், முனைவென்றி, மழவராயனேந்தல் மற்றும் முப்பையூர் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் துவங்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மேலும், முத்துப்பட்டி, சிராவயல், கொம்புக்கரனேந்தல், கழுவன்குளம் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விரிவாக்க மையங்களும் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் சீரான பொருளாதார வளர்ச்சி ஏற்பட நடப்பு நிதி ஆண்டில் ரூ.1388.87 கோடி மதிப்பீட்டிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற கடந்த மூன்றரை ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் 87,828 உறுப்பினர்களுக்கு ரூ.530.15 கோடி மதிப்பீட்டில் பயிர் கடனுதவியும், 33,904 உறுப்பினர்களுக்கு ரூ.178.63 கோடி மதிப்பீட்டில் கால்நடைப் பராமரிப்பு கடனுதவியும், பெண்களுக்கு 4% வட்டி விகிதத்திலும் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.0.90 கோடி மதிப்பீட்டிலான டாச் செட்கோ கடனுதவியும், சிறுபான்மையினர் வகுப்பை சார்ந்தவர்களுக்கு 4% வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.02.18 கோடி மதிப்பீட்டிலான டாம்கோ கடனுதவி யும் தற்சமயம் வரை கூட்டுறவுத் துறையின் சார்பில் மாவட்டம் முழுவதும் வழங்கப்பட்டுள்ளது.

தொகுப்பு

**மு.ராஜசெல்வன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.

# மதுரையில் ஸ்ரீஅரோபிந்தோமீரா இன்டர்நேஷனல் பள்ளியில் ஸ்குவாஷ் உள்விளையாட்டு அரங்கம் திறப்பு விழா






மதுரை: டிச 30

மதுரை மாவட்டம் கீழமாத்தூரில் உள்ள ஸ்ரீஅரோபிந்தோ மீரா இன்டர்நேஷனல் பள்ளியில் ஸ்குவாஷ் உள் விளையாட்டு அரங்கம் திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக ஸ்குவாஷ் போட்டியில் அர்ஜுனா விருதை பெற்ற இந்திய வீரர் ஹரிநதர் பால் சிங் சந்து ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

விளையாட்டு அரங்கில் இரண்டு மற்றும் நான்கு வீரர்கள் சேர்ந்து விளையாடும் வகையில் பேட்மிட்டன், டென்னிஸ், ஸ்குவாஷ் ஆகிய விளையாட்டுகள் முற்றிலும் கண்ணாடியில் அரங்கம் அமைக்கப்பட்டுள் ளது. இந்நிகழ்வில் அரபிந்தோ மீரா பள்ளி குழுமத் தலைவர் சந்திரன், பள்ளியின் நிர்வாக இயக்குனர் அபிலாஷ் மற்றும் தலைமை ஆசிரியர்கள் பயிற்சி ஆசிரியர்கள்மாணவ மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் தூய்மைப்பணியாளர்களுக்கு நவீன கழிவு நீர் அகற்றும் வாகனங்கள் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர்






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்களை அன்று துவக்கி வைத்ததைத் தொடர்ந்து தென்காசி இ. சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா வாசுதேவ நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.சதன் திருமலைக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.









தென்காசி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் 08 பயனாளிகளுக்கு ரூ.53,520/ மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களும், 02 பயனாளிகளுக்கு ரூ.14,560/ மதிப்பிலான இலவச தேய்ப்பு பெட்டிகளும், 300 பயனாளிகளுக்கு ரூ.4.05 கோடி மதிப்பிலான பட்டாக்களுக்கான ஆணையினையும், 15 பழங்குடியின மக்களுக்கு இலவச வீடுகளுக்கான வைப்புத் தொகைக்கான ரசீதுகளும், மாவட்ட தொழில் மையம் மூலம் 19 பயனாளிகளுக்கு அண்ணல் அம்பேத்கார் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவதற்கு ரூ.133.45 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் 02 பயனாளிகளுக்கு வேளாண் வளர்ச்சித்திட்டம் நிரந்தரப் பந்தல் அமைக்கும் பணிக்காக ரூ.2,37,500/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், வேளாண் துறையின் மூலம் 05 பயனாளிகளுக்கு ரூ.12,500/ மதிப்பிலான மின்கலத் தெளிப்பான்களும், வேளாண் பொறியியல் துறை மூலம் 08 பயனாளிகளுக்கு ரூ.64 இலட்சம் மதிப்பில் இலவச ஆழ்துணைக்கிணறு அமைத்து மின்மோட்டார் அமைப்பதற்கான சாவியும், தாட்கோ மூலம் 03 பயனாளிகளுக்கு புதிய தொழில் தொடங்குவதற்கு ரூ.15,76,000/ மதிப்பிலான கடனுதவிகளும், 06 பயனாளிகளுக்கு தூய்மைப் பணியாளர் நல வாரிய உதவித் தொகையும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் 18 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் ரூ.4,50,000/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் 05 பயனாளிகளுக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பிலான திருமண உதவித்தொகையும், மாநில ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 2415 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,01,22,000/ மதிப்பிலான கடனுதவித் தொகையும், கால்நடை பராமரிப்புத் துறை மூலம் பழத்தோட்டங்களில் ஊடு பயிராக பசுந்தீவனத்தை ஊக்குவித்தல் திட்டத்தின் மூலம் 54 பயனாளிகளுக்கு ரூ.1,23,000/ மதிப்பிலான கடனுதவிகளும், 01 பயனாளிக்கு நாட்டுக்கோழி பண்ணை அலகு மானியம் ரூ.1,56,875/ மதிப்பிலான கடனுதவிகளும், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்றோருக்கு 50 சதவீதம் மானியத்தில் ஆதரவற்ற குஞ்சுகள் விநியோகத் திட்டத்தின் கீழ் 356 பயனாளிகளுக்கு ரூ.6,69,600/ மதிப்பிலான கடனுதவிகளும், 17 பயனாளிகளுக்கு பாசனப் பகுதிகளில் பசுந்தீவனம் உற்பத்திக்கு ரூ49.500/ மதிப்பிலான கடனுதவிகளும், மானாவாரி தீவன உற்பத்தியை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 47 பயனாளிகளுக்கு ரூ.69,000/ மதிப்பிலான கடனுதவிகளும், இயந்திர புல்வெளி வெட்டிகள் விநியோகத்தின் கீழ் 09 பயனாளிகளுக்கு ரூ.1,44,000/ மதிப்பிலான கடனுதவிகளும் என மொத்தம் 3280 பயனாளிகளுக்கு ரூ.15,78 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், தென்காசி நகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்ததாவது,

நாங்கள் தென்காசி நகராட்சியில் தூய்மைப் பணியாளர்களாக பணிபுரிந்து வருகிறோம். இவ்விழாவில் எங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க பணிபுரியும் போது பாதுகாப்பாக பணிபுரிவதற்காக பாதுகாப்பு உபகரணங்களை வழங்கினார்கள். இதனால் நாங்கள் வேலை செய்யும் போது பாதுகாப்பாக பணிபுரிய முடியும். இவ்வாய்ப்பினை எங்களுக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு எங்க ளுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
**இரா.சண்முகசுந்தரம்.**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்(செய்தி)
ரா.ராமசுப்பிரமணியன்
தென்காசி மாவட்டம்.

# சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



சிவகங்கை, டிச.30

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர், விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந்தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாதத்தில் கடைசி வெள்ளிக்கிழமை அன்று நடத்தப்பட்டு வருகிறது. அதனை, மேலும் விரிவுபடுத்திடும் பொருட்டு, விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில், கடந்த இரண்டாம் வெள்ளிக்கிழமை (13.12.2024) அன்று வருவாய் கோட்டளவில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்திட திட்டமிடப்பட்டு, தேவகோட்டை வருவாய் கோட்ட அளவில், சிறப்பாக நடைபெற்றது.

அவ்வாறு, நடைபெற்று வரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி, நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும், நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், விவசாய நிலங்களை வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திடவும், விவசாயிகளின் கோரிக்கைகளுக்கிணங்க, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் அரசின் திட்டங்களின் பயன்களை முழுமையாக பெற்றிடவும், தேவையான சான்றிதழ்களை வழங்கிடவும், துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், விவசாயிகளுக்கான மின் விநியோகங்களை சீரான முறையில் வழங்கிடவும், தேவையான உரங்களை இருப்பு வைத்திடவும், வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், கடனுதவிக்குரிய மானியத் தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், குறிப்பாக இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், இ.ஆ.ப., தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மை) சுந்தரமகாலிங்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161